**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் திருநங்கைகள் நல வாரியம்!**



# 33 இடம் பொருள் கலைஞர்



# திருநங்கைகள் நல வாரியம்!

## இந்தியாவுக்குச் சமத்துவப் பாடம்!

*2021*-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஒன்றிய சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் ஓர் அறிவிப்பை பத்திரிகைகளில் வெளியிட்டது.

அதில், 'திருநங்கைகள் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டம் 2020 பிரிவு -10 (1)-ன் படி, திருநங்கைகளின் உரிமைகள் மற்றும் நலன்களைப் பாதுகாக்கவும், அரசால் உருவாக்கப்படும் திட்டங்கள் மற்றும் நலத்திட்டங்களைப் பெற உதவும் வகையிலும், சம்பந்தப்பட்ட மாநில அரசு திருநங்கைகள் நல வாரியத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது குறித்தும் உரிய நடவடிக்கை எடுப்பதற்கான வழிமுறைகள் குறித்தும் 09.10.2020 அன்று அனைத்து மாநில அரசுகளுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருநங்கைகள் மீது பாரபட்சம் காட்டுவதிலிருந்து அவர்களைப் பாதுகாக்கவும், அவர்களது நிலையை உயர்த்தவும், ஒன்றிய சமூக நீதி மற்றும் அதிகார மளித்தல் அமைச்சகம் திருநங்கைகள் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டம் 2019-ஐ நிறைவேற்றியது. இந்தச் சட்டம் 2020, ஜனவரி 10-ஆம் தேதி அன்று நடைமுறைக்கு வந்தது" என அந்த அறிவிப்புச் சொன்னது.

### முன்னோடி முதல்வர்

மாநில அரசுகளே வாரியத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம் என்ற கருத்துக்கு ஒன்றிய அரசு வருவதற்கு 12 ஆண்டுகளுக்கு முன்னரே திருநங்கை களுக்கான வாரியத்தை உருவாக்கி, **'சமத்துவம் மிக்கது தமிழ்நாடு'** என இந்தியாவுக்கே அடையாளம் காட்டியவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

திருநங்கைகளும் இந்தச் சமுதாயத்தின் அங்கம் என்பதை உணர்த்தும் விதமாகவும், அவர்களின் நலன்களை உறுதி செய்வதற்காகவும் 2008-ஆம் ஆண்டில் ஏப்ரல் 15 -ஆம் தேதி அன்று 'தமிழ்நாடு திருநங்கைகள் நல வாரிய'த்தைத் தொடங்கி வைத்தார் கலைஞர்.

### நிதி ஒதுக்கீடுகள்

தொடங்கியது மட்டுமல்ல, அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் வகையில், அவர்களுக்குப் பல்வேறு நலத் திட்ட உதவிகளையும் கழக அரசு வழங்கியது. அந்த நல வாரியத்தின் மூலமாக 3,878 பேர் கணக்கெடுக்கப்பட்டு, அவர்களில் 2,328 பேருக்கு அடையாள அட்டைகளும், 1,238 பேருக்குக் குடும்ப அட்டைகளும், 133 பேருக்குத் தொகுப்பு வீடுகளும், 100 பேருக்குத் தையல் இயந்திரங்களும், 482 பேருக்கு வீட்டுமனைப் பட்டாக்களும், 585 பேருக்கு கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் மருத்துவ அட்டைகளும் கலைஞர் ஆட்சிக் காலத்திலேயே வழங்கப்பட்டன. அதற்கென முதற்கட்டமாக 2009-ஆம் ஆண்டில் ரூ.50 லட்சமும், 2010-ஆம் ஆண்டில் ஒரு கோடி ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்தார்.

40 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற ஏழைத் திருநங்கைகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் ஓய்வூதியம் வழங்கவும் வழிவகை செய்தார்.

> முடங்கிக் கிடந்த இந்த நலவாரியத்துக்கு கழக அரசு பொறுப்பேற்றதும், 12 திருநங்கைகள் மற்றும் ஒரு பெண் உட்பட 13 அலுவல் சாரா உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர். திருநங்கைகளுக்கான ஓய்வூதியம் ரூ.1,500 ஆக உயர்த்தப்பட்டது.

### பெயர் மாற்றம்

திருநங்கையர்க்கான நலவாரியம், வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் முயற்சிகளுடன், சமூகத்தின் புழக்கத்தில் உள்ள 'அரவாணிகள்' என்கிற பெயரினை மாற்றும் முயற்சியைச் செய்தவரும் கலைஞரே. இது தொடர்பாக, சட்டப்பூர்வ வடிவங்கள் மூலம் திருநங்கைகள் / திருநம்பிகள் என அடையாளப்படுத்தினார். விண்ணப்பப் படிவங்களில் ஆண்/பெண் என்பதற்கு எவ்வாறு 'M/F (Male/Female)' என்று அச்சிடப்பட்டிருக்குமோ அதைப்போல, திருநங்கையர்களை (TRANSGENDER) குறிக்கும் வகையில், 'T' என்ற எழுத்தினை முதன்முதலில் குறிப்பிட்டது கலைஞரின் ஆட்சி.

தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் எடுக்கப்பட்ட இந்த முன்னெடுப்புதான் இந்தியாவுக்கே முன்மாதிரி. இதுகுறித்து 16-3-2008 அன்று 'டைம்ஸ் ஆப் இந்தியா' ஆங்கில நாளிதழ், *"Third Sex gets its due in T.N. - Karuna Govt. is Country's First to issue Ration Cards with 'T' as Gender"* என்ற தலைப்பில் பெரிதாக எழுதியிருந்தது. ஆனால், ஒன்றிய அரசு அதை உணர்ந்து கொள்வதற்கு காலம் பிடித்தது.

### மாநிலங்களவையில் மசோதா

2013-ஆம் ஆண்டு இந்தியா முழுவதும் ஆறாவது பொருளாதாரக் கணக்கெடுப்புப் பணிகள் நடந்தபோது, அந்தப் படிவத்தில் திருநங்கையர்களுக்கு 9 என்ற குறியீட்டு எண் வழங்கப்பட்டபோது, கலைஞரிடமிருந்து கடும் எதிர்ப்பு எழுந்தது. அந்தப் படிவத்தில் ஆண் என்பதற்கு 1 என்றும், பெண் என்பதற்கு 2 என்றும் குறிப்பிட்டு விட்டு, ஆண் பெண் அல்லாத பாலினப் பிரிவுக்கு 9 என்ற குறியீட்டு எண் பயன்படுத்தப்பட்டது. "ஏற்கனவே எங்களை அந்த 9 என்ற எண்ணைக் குறிப்பிட்டுத்தான் கிண்டல் செய்கிறார்கள், இப்போது அரசே எண்ணை குறிப்பிட்டிருப்பது எங்களை அவமானப்படுத்துவதாக உள்ளது" என திருநங்கைகள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

> **சமூகத்தின் புழக்கத்தில் உள்ள 'அரவாணிகள்' என்கிற பெயரினை மாற்றும் முயற்சியைச் செய்தவரும் கலைஞரே.**

ஒன்றிய அரசின் இந்தப் பார்வையை மாற்றவும், கழகம்தான் முன் நின்றது. இது தொடர்பாக கலைஞர் அறிக்கை வெளியிட்டதுடன், ஒன்றிய அரசின் சட்ட வடிவங்களுக்கும் முனைப்பு கொடுத்தார். அதையடுத்து, 2014 -ஆம் ஆண்டில், மாநிலங்களவையில் கழகத்தின் உறுப்பினர், திருச்சி சிவா தாக்கல் செய்த, திருநங்கைகள் உரிமைகள் மசோதா ஏற்கப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

### தொடர் செயல்பாடு

திட்டத்தைத் தொடங்குவது மட்டுமல்ல, ஆட்சியில் இல்லையென்றாலும் அந்தத் திட்டம் எந்தத் திசையில் செல்கிறது என்பதை, கண்காணிப்பதைத் தனது கடமைகளில் ஒன்றாகவே செய்தவர் கலைஞர். அவருக்குப் பின் வரும் ஆட்சியர்கள் அந்தத் திட்டத்தை முடக்கும்போது அவரைப்போல வருத்தம் கொள்வோர் எவருமில்லை. திருநங்கைகள் நல வாரியத்திலும் இதுதான் நிகழ்ந்தது.

கலைஞர் கொண்டு வந்ததால் அதை முடக்க வேண்டும் என நினைக்கும் அ.தி.மு.க. ஆட்சியில் திருநங்கைகள் நல வாரியம் செயல்படவே இல்லை. 2015-2016 -ஆம் ஆண்டுக்கான சமூக நலத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பின் செயல் திட்டத்தின்படி திருநங்கைகள் நல வாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்பட வேண்டிய கல்விக் கடன் போன்றவை வழங்கப்படவே இல்லை. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி கிடைத்த பதிலில், இரண்டு பேருக்கு மட்டுமே அந்தக் கடன் வழங்கப்பட்டதாகக் கூறப்பட்டிருந்தது. கலைஞர் முன்னெடுத்ததால் திருநங்கை / திருநம்பி என்கிற பெயரையே மாற்றி, மூன்றாம் பாலினம் எனக் குறிப்பிடத் தொடங்கியது அ.தி.மு.க. அரசு. இது சமத்துவமற்ற சொல் என்பதை அறிந்துகொள்வதற்கு அவர்களிடம் ஆற்றல் இல்லை.


அப்போது, அது தொடர்பாக 2015-ஆம் ஆண்டு நவம்பர் 10- ஆம் தேதி 'தி இந்து' ஆங்கில நாளிதழ், மிகப் பெரிய அளவில் அரைப் பக்க அளவுக்குச் சிறப்புச் செய்தித் தொகுப்பு வெளியிட்டது. அதற்குத் தலைப்பே, நாட்டிற்கே முன்மாதிரியாக இருந்த நல வாரியம், முடக்கப்பட்டுள்ளது என்றது. *(Transgender Welfare Board in a limbo - Once a model for the country, the Board has been inactive for the past few years: former members- உறுதியற்ற நிலையில் அரவாணிகள் நல வாரியம் - ஒரு காலத்தில் நாட்டுக்கே முன்மாதிரியாக இருந்தது - கடந்த சில ஆண்டுகளாக வாரியம் செயல்படாமல் உள்ளது)*

இந்தக் கட்டுரையைக் குறிப்பிட்டும் அரசுக்கு அழுத்தம் கொடுத்தார் கலைஞர். இப்படித் தனது காலம் வரை சமத்துவத்துக்கும், ஒடுக்கப்பட்டவர்களின் உத்தரவாதமான வாழ்க்கைக்கும் ஒளியாக நின்றவர் கலைஞர். அந்த ஒளிதான் விடியல் அரசின் ஆதாரம்.

...வலம் வருவோம்

---

## நூற்றாண்டுக்கு வலு சேர்க்கும் நூல்!





கலைஞரை அறிந்துகொள்ள ஓராயிரம் நூல்கள் வரிசையில், வாசகர்கள் மொழியில் எழுதப்பட்ட நூலாகத் தனித்துத் தெரிகிறது **'திராவிடத் திருமகன்'** நூல்.

69 தலைப்புகளின் கீழ், சிறு சிறு குறிப்புகள் போல எழுதப்பட்ட தகவல்கள் எளிதாக வாசிக்கவும், எடுத்துக் கையாளவும் பயன்படும் வகையில் உள்ளன. கலைஞரின் எழுத்துகள், ஆட்சிப் பணித் திட்டங்கள், அரசியல் வாழ்க்கை என அவரின் 80 ஆண்டு கால பொது வாழ்க்கை குறித்த இந்தத் திரட்டு நூலை எழுதியவர் வானம்பாடி வெ.சுப்பிரமணியன். சேலம், ஆத்தூரைச் சேர்ந்த 'தமிழினி பதிப்பகம்' வெளியிட்டுள்ளது.

கலைஞரின் நூற்றாண்டுக் கொண்டாட்டத்தை உயர்த்திப் பிடிக்க வலுசேர்க்கிறது இந்த நூல். வாசித்து மகிழ்வோம்.

## :ப்ளாஷ்பேக்



இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. வாட்ஸ்அப் எண்: 90033-24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

## ஆறுதலும் ஊக்கமும்!



சேதுராமன்

எனக்கு விவரம் தெரிந்த வயதிலிருந்து, இன்று வரை 56 ஆண்டுகள் கழகப் பணியாற்றி வருகிறேன். 1994-ஆம் ஆண்டு கழகம் சந்தித்த நெருக்கடியின் போது இன்றைய கழகத் தலைவரும் அன்றைய இளைஞர் அணி செயலாளருமான தளபதி அவர்களை தேனாம்பேட்டை அன்பகம் அலுவலகத்தில் சென்று சந்தித்து ஆதரவைத் தெரிவித்தோம். என்னுடன் அன்றைய ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் திரு கோ.தளபதி அவர்களும் உடனிருந்தார். அந்த சந்திப்பின்போது தளபதி அவர்கள் "கழகம் கட்டுக்கோப்பாக இருக்க எத்தகைய தியாகத்தையும் செய்ய நாம் தயாராக இருக்க வேண்டும்" என்று ஆறுதல் வார்த்தைகளைக் கூறி ஊக்கமளித்தார்..

**-எஸ்.சேதுராமன், மாநில துணைச் செயலாளர், விவசாயத் தொழிலாளர் அணி, மதுரை.**


## கருவூலம்

### புதுவை அரசியல் மாற்றம்!

**1967-ஆம் ஆண்டு, தமிழ்நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றம், 1969-ஆம் ஆண்டு புதுச்சேரியிலும் ஏற்பட்டது. அதற்கு, முன் 'காலையில் ஒரு முதல்வர் – மாலையில் ஒரு முதல்வர்' என நிலையற்ற ஆட்சி நீடித்து வந்தது. அந்த நிலையில், முதல் முறையாக, புதுவையில் நிலையான ஆட்சியைத் தந்தது கழகம் – கம்யூனிஸ்ட் கூட்டணி ஆட்சி. இந்த வெற்றிக்கு இந்திய முஸ்லிம் லீக் துணை நின்றது. கழகத்தைச் சேர்ந்த எம்.ஓ.ஹெச்.பரூக் முதல்வராகப் பொறுப்பேற்றார்.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 226





எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131